Registered as a Newspaper
பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 60
வியாழக்கிழமை
25 ஜனவரி 2024
தை 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"கெடுகுடி சொற்கேளாது. உவையும் ஆர் எதிர்த்தாலும் நினைச்சதை செய்து அழியப்போயினம் பாருங்கோ"

### பெரும் எதிர்ப்புக்கு மத்தியிலும்

# நிகழ்நிலைச் சட்டம் நிறைவேறியது நேற்று!

## ஆதரவாக 103 வாக்குகள்

**கொழும்பு, ஜனவரி 25**

**சமூக ஊடகங்கள் மற்றும் இணையத்தளங்களைக் கட்டுப்படுத்தும் நிகழ்நிலைக் காப்புச் சட்டம் நாடாளுமன்றத்தில் நேற்று மாலை, எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் 46 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. சட்ட வரைவுக்கு ஆதரவாக 108 வாக்குகளும், எதிராக 62 வாக்குகளும் அளிக்கப்பட்டன.**

11



## கணவரை வழியனுப்பிவிட்டு வந்த ஆசிரியை விபத்தில் மரணம்

சிறுவர்கள் உட்பட 8 பேர் படுகாயம்

ஹைஏஸ் மீது இ.போ.ச. பஸ் மோதியதில் துயரம்

கிளிநொச்சி, ஜன.25

கிளிநொச்சி, உமையாள்புரத்தில் நேற்று அதிகாலை நடந்த விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்தில் எண்மர் காயமடைந்துள்ளனர்.

09

## போதைப் பாவனையால் பறிபோனது இளைஞன் உயிர்

யாழில் தொடரும் துயரம்

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ்ப்பாணத்தில் இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ள நிலையில், இளைஞனின் உயிரிழப்புக்கு ஹெரோய்ன் போதைப்பொருள் பாவனையே காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

09

## நாடாளுமன்றில் நேற்றுப் பதற்றம்

கொழும்பு, ஜன.25

நிகழ்நிலை காப்புச் சட்டம் நேற்று விவாதத்துக்கு எடுக்கப்பட்டிருந்த நிலையில், எதிர்க்கட்சிகளின் கடுமையான எதிர்ப்பால் நாடாளுமன்றத்தில் பதற்றம் ஏற்பட்டது.

இந்தச் சட்டவரைவு முழுமையாக மக்களின் கருத்துச் சுதந்திரத்துக்கு எதிராக இருக்கின்றது என்றும், அதற்கு அனுமதி

09

### பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்:

## உயர்நீதிமன்றில் 18 மனுக்கள்

கொழும்பு, ஜன.25

பயங்கரவாத எதிர்ப்புப் சட்ட வரைவு தொடர்பில் மேலும் 18 மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நாடாளுமன்றில் அறிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றம் சபாநாயகர் மஹிந்த

09

## ரணிலின் சட்டத்தால் பேரழிவுப் பின்னடைவு!

எச்சரிக்கின்றது மனித உரிமைகள் கண்காணிப்பகம்



கொழும்பு, ஜன.25

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அவசரமாகக் கொண்டுவரப்படும் நிகழ்நிலை காப்புச் சட்டம் பேரழிவு தரும் பின்னடைவாக இருக்கும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியாவுக்கான பிரதிப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி, இந்த ஆண்டு இறுதியில் இலங்கை நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களுக்கு தயாராகி வரும்நிலையில், இந்தச் சட்டம் கருத்துச் சுதந்திரத்துக்கான

09

## புதிய அரசில் சட்டம்!

ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு



கொழும்பு, ஜன.25

நிகழ்நிலை காப்புச் சட்ட வரைவுக்கு 98 சதவீத மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். எமது ஆட்சியில் இந்தச் சட்டம் முழுமையாக இரத்துச் செய்யப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும்

09

## வங்குரோத்து நாயகர்களுக்கு சட்டம் இயற்ற உரிமையில்லை!

நாடாளுமன்றில் வெளுத்த கிரியல்ல



கொழும்பு, ஜன.25

நாட்டை வங்குரோத்து அடைய வைத்தவர்களுக்குச் சட்டம் இயற்றும் தார்மீக உரிமை கிடையாது. அட்டைபோல் ஒட்டிக்கொண்டிருக்காமல் இந்த அரசாங்கம் உடன் பதவி விலகவேண்டும் என்று எதிரணி பிரதம கொறடாவான நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்நிலைக் காப்புச் சட்டவரைவு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிகழ்நிலை காப்பு

09

### யாழ். பல்கலை சட்டத்துறையின்

## சட்டமாநாடு 27ஆம் திகதி


யாழ்ப்பாணம், ஜன.25

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் சட்டத்துறை நடத்தும் யாழ்ப்பாண சட்ட மாநாடு எதிர்வரும் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஹூவர் அரங்கில் நடைபெறவுள்ளது.

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிகழ்நிலை காப்புக்கு எதிராக யாழில் போர்

யாழ்ப்பாணம், ஜன. 25

**அரசாங்கத்தால் கொண்டுவரப்படவுள்ள நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று புதன்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

நிகழ்நிலை காப்புச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நேற்று முதல் விவாதம் இடம்பெற்று வருகின்றது. இந்தச் சட்டவரைவு பொதுமக்களின் கருத்துச் சுதந்திரத்தை கடுமையாகப் பாதிக்கும் வகையில் உள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த நிலையிலேயே இந்தச் சட்டவரைவுக்கு எதிராக நேற்றுப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தும் வகையிலும், கருத்துச் சுதந்திரத்தை வலியுறுத்தும் வகையிலும் எழுதப்பட்ட பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர். (ம-100)

## 'இழைய வளர்ப்பு' மூலம் தென்னங்கன்று உற்பத்தி

### இலங்கை சாதனை

உலகில் முதல் தடவையாக இழைய வளர்ப்பு மூலம் தென்னை நாற்றுகள் உற்பத்தியில் இலங்கை வெற்றிகரமாக மேற்கொண்டு சாதனை படைத்துள்ளது. லுனுவில தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வே வெற்றியளித்துள்ளதாக ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி சனாதனி ரணசிங்க தெரிவித்தார். இழைய வளர்ப்பு மூலம் தென்னை நாற்றுகள் தயாரிக்கப்படுவது உலகில் இதுவே முதல் தடவை.

இந்த உற்பத்திக்கு அதிக இடம் தேவைப்பட்டாலும், ஆராய்ச்சிக் கூடத்தில் சுமார் ஆறு அங்குல உயரமுள்ள கண்ணாடிக் குழாயில் தென்னங்கன்றுகள் வெற்றிகரமாக வளர்ந்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் புதிய உற்பத்தியை விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர நேரில் சென்று பார்வையிட்டார். (ச-இ)



## 300 கிலோ கஞ்சா நேற்று எரித்தழிப்பு

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனின் மேற்பார்வையில் 300 கிலோவுக்கு மேற்பட்ட கஞ்சா நேற்று எரித்தழிக்கப்பட்டது.

வவுனியா மேல் நீதிமன்றத்தால் கடந்த வருடம் முடிவுறுத்தப்பட்ட வழக்குகளில் சான்றுப் பொருள்களாக பாரப்படுத்தப்பட்ட கஞ்சாப் பொதிகளே இவ்வாறு எரித்தழிக்கப்பட்டுள்ளன. சுகாதார நிலைமைகளை கருத்திற்கொண்டு மக்கள் நடமாட்டம் மற்றும் அருகே வீடுகள் அற்ற பகுதியில் வைத்து அவை எரிக்கப்பட்டன. (ம-110)

## பெலியத்த துப்பாக்கிச்சூடு; மாத்தறையில் ஒருவர் கைது

கொழும்பு, ஜன. 25

பெலியத்தவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஐவர் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாத்தறையில் வைத்து அவர் நேற்றுப் புதன்கிழமை கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர், தாக்குதல் நடத்தியவர்கள் பயன்படுத்திய வாகனத்தின் சாரதி என்றும் இவரே இந்தத் துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தை திட்டமிட்டவர் என்றும் சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

### இணுவில் கந்தசுவாமி ஆலய

## தைப்பூசத்தையொட்டி வீதித்தடை அறிவிப்பு

இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள தைப்பூச மஞ்சத்திருவிழாவை யொட்டி வீதித்தடைகளை நடைமுறைப்படுத்த உற்சவ முன்னாயத்தக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி காலை 5 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை கே.கே.எஸ். வீதியுடன் இணையும் இணுவில்- மானிப்பாய் வீதி மற்றும் ஆலயத்தின் இருபுறமும் அண்மையிலுள்ள வீதிகள் ஆகியவற்றினுள் வாகனங்கள் உட்செல்லத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. மாற்று ஒழுங்காக பொதுமக்கள் கே.கே.எஸ். வீதியுடன் இணைந்த கெக்கிலிப்பாய் வீதி, செட்டிவீதி என்பவற்றை பயன்படுத்தலாம். அத்துடன் ஆலயத்துக்கு வருகைதரும் பக்தர்களின் வசதி கருதி குடிதண்ணீர், சுகாதாரம், வாகனப் பாதுகாப்பு நிலையம் என்பன ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன என்றும் ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச)

## திருவாசக முற்றோதல்

சந்நிதியான் ஆச்சிரமத்தில் தைப்பூச நன்னாளான இன்று வியாழக்கிழமை முதல் மாதமாதம் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் திருவாசக முற்றோதல் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தெரிவித்தார். (ப-66)





# நல்லூர்க் கந்தனின் நெற்புதிர் அறுவடை

யாழ்ப்பாணம், ஜன. 25

தைப்பூசதினத்துக்கு முதல்நாள் கொண்டாடப்படும் 'புதிர் தினம்' எனும் பாரம்பரிய நிகழ்வான நெற்புதிர் அறுவடை நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் நேற்று புதன்கிழமை சிறப்புற இடம்பெற்றது.

கோயில் அறங்காவலர், சிவாச்சாரியார் முதலானோர், அதிகாலை வேளை ஆலயத்துக்குச் சொந்தமான மட்டுவிலுள்ள வயலுக்குச் சென்று முதலாவது புதிரை அறுவடை செய்து வந்தனர்.

இந்த அறுவடை நெல்லில் இருந்து அமுது செய்து நல்லூரானுக்கு படையல், பூசைகள் இடம்பெற்று பக்தர்களுக்கு அமுதளிக்கப்படும். (ச-66,20)

## 'அம்புலன்ஸ்' பழுதடைவு: பூநகரி மக்கள் நெருக்கடி

கிளிநொச்சி - பூநகரியில் '1990' அம்புலன்ஸ் சேவை கடந்த 8 மாதங்களாக இடம்பெறாததனால் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளோம் என்று பூநகரி பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

பொலிஸ் நிலையங்களினூடாக '1990' அம்புலன்ஸ் சேவை இடம்பெற்று வருகிறது. பூநகரி பொலிஸ் நிலையத்திலுள்ள '1990' அம்புலன்ஸ் பழுதடைந்துள்ளதால் கடந்த 8 மாதங்களாக சேவை தடைப்பட்டுள்ளது.

தற்போது முழங்காவில் பொலிஸ் நிலையத்திலிருந்தே '1990' அம்புலன்ஸ் சேவை பூநகரி பிரதேசத்துக்கான பணியில் ஈடுபடுகிறது. இதன் காரணமாக உயிராபத்துகளை எதிர்நோக்கும் நிலை ஏற்படுகிறது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் திருத்தப்பணிகளை மேற்கொண்டு பழுதடைந்துள்ள அம்புலன்ஸை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாள அட்டை இலக்கத்தை வரி இலக்கமாக்க நடவடிக்கை!


## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன. 25**

**தேசிய அடையாள அட்டை இலக்கத்தை தனிநபரின் வரி இலக்கமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய தெரிவித்தார்.**

இதன் மூலம் அரசாங்க வருமானம் குறித்துத் தெளிவான தரவு அமைப்பு உருவாக்கப்படும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். 18 வயதுக்கு மேற்பட்டவர்களின் தகவல் அமைப்பைப் பயன்படுத்தி இந்தச் செயல்முறை மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மக்களுக்கு இலகுவாக வரி இலக்கம் வழங்குவது தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ம)



இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ்ஜாவுக்கும் ஜே.வி.பி.யினருக்கும் இடையிலான சந்திப்பொன்று இந்தியத் தூதரக அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ச-இ)

# கசிப்புடன் பெண் கைதானார்

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்ப்பாணம் கோப்பாய் மத்திய பகுதியில் கசிப்புடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டது. அவரிடமிருந்து 10 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டதுடன், அவரை சட்டநடவடிக்கைக்குட்படுத்தும் நகர்வுகளும் முன்னெடுக்கப்பட்டன. (ம-125)

# கூட்டணியில் விரைவில் இணைவாராம் டலஸ்!

## மத்தும பண்டார தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 25

நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவை தனிமைப்படுத்தவில்லை, அவரும் விரைவில் எமது கூட்டணியில் இணைவார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

'ஐக்கிய மக்கள் சக்தி நடத்திய கருத்துக்கணிப்பில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவே முன்னிலையில் உள்ளார். சுதந்திரக்கட்சி, சுதந்திரசபை என்பவற்றின் உறுப்பினர்கள் எம்முடன் நேரடியாக இணையவுள்ளனர். அடுத்துவரும் நாள்களில் இதற்கான நடவடிக்கை இடம்பெறவுள்ளது. பொதுஜன பெரமுனவில் உள்ள ஊழல் மோசடியுடன் தொடர்புபடாதவர்களும் வரலாம். எந்தவொரு உறுப்பினரையும் நாம் பேரம்பேசி விலைக்கு வாங்குவதில்லை. கொள்கை அடிப்படையிலான பயணமே தொடர்கின்றது' என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம44)

# நாடாளுமன்ற மின்கட்டணம் நிலுவைகள் ஏதுமில்லை!

## எரிசக்தி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 25

நாடாளுமன்றம் அல்லது ஜனாதிபதி அலுவலகம் என்பவற்றின் மின்சாரக் கட்டண நிலுவை ஏதும் இல்லை என்று அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அமைச்சர் இந்தத் தகவலை வெளிப்படுத்தியுள்ளார்.

நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதி அலுவலகம் என்பவற்றின் பெருமளவு மின்கட்டணம் நிலுவையில் உள்ளது என்று சமீப நாள்களாகத் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையிலேயே, இந்தக் கருத்துகளை அவர் வெளிப்படுத்தியுள்ளார். நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதி அலுவலகம் என்பன தொடர்பில் பொய்யான தகவல்களை மக்கள் மயப்படுத்திய குற்றத்துக்காக மின்சாரசபை ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜயலால், நாடாளுமன்ற சிறப்புரிமைக்குழுவின் முன் அழைக்கப்பட்டு விசாரிக்கப்படவேண்டும் என்றும் அமைச்சர் காஞ்சன வலியுறுத்தியுள்ளார். (ம)

# சர்வதேச ஒழுங்குமுறையை இலங்கை பின்பற்றவும்

## ஆசிய இணையக் கூட்டணி சுட்டிக்காட்டு

இணையப் பாதுகாப்பு எனத் தெரிவித்து இலங்கை அரசாங்கம் கொண்டுவரும் நிகழ்நிலை காப்புச் சட்டமானது, இணையத்தில் தமது எண்ணங்கள், யோசனைகளை சுதந்திரமாக வெளிப்படுத்தும் உரிமைகளை நசுக்கும் கொடூரமான சட்டமாக அமையும் என்று ஆசிய இணையக் கூட்டணி அதிருப்தி வெளியிட்டுள்ளது. இதுதொடர்பில் அதன் நிர்வாகப் பணிப்பாளர் ஜெப் பெய்ன் தெரிவிக்கையில், ஆசிய இணையக் கூட்டணி என்பது உலகின் பல சக்திவாய்ந்த இணையம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களை உள்ளடக்கிய ஒரு தொழில் நிறுவனமாகும். இந்தச் சட்டவரைவால் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் [illegible] நாட்டு முதலீடுகளில் நேரடிப் பாதிப்பு ஏற்படும். இலங்கை அரசு, இணையப் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கும் அதே வேளையில், சர்வதேச சிறந்த நடைமுறைகளுடன் ஒத்துப்போகும் ஒழுங்குமுறைகளைப் பேண தொழிற்றுறை பங்குதாரர்களுடன் இணைந்து செயற்படவேண் [illegible]

# தினம் தெரியுமோ?

இப்ப நகை நட்டு வாங்கிறதை விட, மரக்கறியள் வாங்கிறதுக்குத்தான் கனக்க யோசிக்கவேண்டியிருக்கு. எல்லா மரக்கறியும் ஆனைவிலை, குதிரை விலை தான். இந்த விலைகாலத்திலதான் தோட்டம் செய்யிற ஆக்கள் ஏதோ கொஞ்சம் உழைக்கலாம். தோட்டம் வைச்சிருக்கிறவை எல்லாரும் இந்த விலைவாசியோட பணக்காரர் ஆகிடுவினம் எண்டுதான் எல்லாரும் யோசிப்பம். ஆனால் உண்மை வேற மாதிரித்தான் இருக்குது.

என்னதான் மழை, வெயிலுக்குள்ள நிண்டு, நேரகாலம் பாக்காம உழைச்சு தோட்டம் செய்தாலும், அவைக்கு அதின்ர பலன் முழுசாச் சுவறுறேலை. ஏதோ நெல்லுக்கிறைச்சது புல்லுக்குப் பொசிஞ்ச மாதிரிதான், இவை செய்யிற தோட்டத்தின்ர பலனும், கொஞ்சமாத்தான் இவைக்கு கிடைக்குது. மிச்சமெல்லாம் புறோக்கர்மாருக்கும், மரக்கறியை அப்பிடியே 'லொட்டா' வாங்கி இருந்த இடத்தில விக்கிற யாவாரிமாரும் தான், தோட்டம் செய்யிறவையை விட கொள்ளை லாபம் பாக்கினம். அதுவும் இந்த மரக்கறி விலையேத்தக் காலத்தில அவை இன்னும் தவிச்ச முயல் அடிக்கிறதிலதான் குறியா இருக்கினம். தோட்டக்காரரிட்ட மரக்கறியளை வாங்கிற விலையை விட, ரண்டு மூண்டு மடங்கு வைச்சுத்தான் சனத்துக்கு விக்கினம். தோட்டக்காரராவது மழை அழிச்சுப் போட்டுது, உரம் விலையேறிட்டுது, பனியால பூச்சி விழுந்து கண்டுகளை எல்லாம் அரிச்சுப் போட்டுது எண்டு விலை கூடினதுக்கு காரணங்கள் சொல்லலாம். அதில ஒரு நியாயமும் இருக்குது. ஆனால் சந்தைக்குள்ள ஒரே இடத்தில இருந்து யாவாரம் செய்யிறவை என்ன காரணம் சொல்லப்போகினம்?

யாவாரிமார்தான் இப்பிடி அடிமாட்டு விலைக்கு மரக்கறியளை வாங்கிப் போட்டு, ஆனை விலைக்கு விக்கினம் எண்டால் சந்தைக் குத்தகைக்காரரும், புறோக்கர் மாரும் அதைவிட மோசம். இவையளும் யாவாரிமாரோட கூட்டுச் சேர்ந்துகொண்டு, எல்லா மரக்கறியளிலையும் இப்பவும் 10 வீதத்துக்கும் மேல கழிவு காட்டுகினம். கீரைப்பிடியில இருந்து கத்தரிக்காய் வரை இதுதான் கதை. 'ஏன் இப்பவும் பத்துவீதம் கழிக்கிறியள்?' எண்டு ஆரும் கேட்டால், ' இப்பத்தை விலையில மரக்கறியளை வாங்கிப்போட்டு, பிறகு அது கூடாதெண்டா எங்களுக்கெல்லோ பெரும் நட்டம். உங்களுக்கென்ன இப்பதான் சுளையாகக் காசு கிடைக்குதே. அதில பத்துவீதம் கழிச்சா குறைஞ்சோ போடுவியள்?' எண்டு புதுக்கதை சொல்லுகினமாம். அப்பிடியும் கழிவு இல்லாமல் மரக்கறியை எடுக்கச் சொல்லி தோட்டக்காரர் விடாப்பிடியா நிண்டால் 'கழிவு தராட்டி நாங்கள் ஆரும் இதை வாங்கமாட்டம்' எண்டு எல்லாரும் ஒண்டா நிக்கினமாம். தோட்டத்தில இருந்து கொண்டுபோன பொருளை எப்பிடியும் விக்கோணுமே எண்டதால, என்ன செய்யிறதெண்டு தெரியாமல் கடைசியில கழிவைக் குடுத்திட்டுத்தான் தங்கட மரக்கறியளை தோட்டக்காரர் குடுக்கினமாம். விலை கூடினாலும், குறைஞ்சாலும் தோட்டம் செய்யிறவைக்கு விடிவுகாலம் இல்லைப்போல.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மா.ந.பரமேஸ்வரன்



# சரித்திரப் பிரசித்திபெற்ற இணுவைப் பெருமஞ்சம்

இணுவைக் கந்தன் ஆலயம் காலத்தால் முற்பட்ட தன்மையைக் கொண்ட சரித்திரப் பிரசித்திபெற்ற முருகன் ஆலயமாகும். இவ்வாலயம் இணுவைக் காஞ்சி எனவும், இணுவைக் கந்தகோட்டம் எனவும் பெயர் பெற்றுள்ளது. 'துதி செய்யும் காஞ்சிப் பதியில் வாழ் முருகா' என முருகேசு கணபதிதாசன் என்னும் கவிஞன் தானியற்றிய இணுவை முருகன் பக்தி அருட்கீர்த்தனை என்னும் நூலில் உள்ள பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார். இக்கீர்த்தனைப் புத்தகம் வெளியிடப்பட்டது 1945ஆம் ஆண்டு காலப்பகுதியாகும். காலத்தால் முற்பட்ட ஆலயத்தில் கி.பி. 1860ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவதரித்த சுப்பிரமணியம் சந்நியாசியாரால் (பெரிய சந்நியாசியார்) இறைவன் திருவருளுக்கேற்ப அமைக்கப்பட்டதே இன்று நாம் காணும் உலகப் பெருமஞ்சமாகிய இணுவைத் திருமஞ்சம். இம்மஞ்ச வேலைகள் ஆரம்பமாகிய காலம் 1896ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் உத்தர நட்சத்திரத்தினத்தன்று எனவும், திருப்பணி நிறைவெய்திய காலம் 1909ஆம் ஆண்டு எனவும் நூல்கள் மூலம் அறியக் கிடக்கின்றது.

மஞ்சத்திருப்பணி நிகழ்ந்த இடம் மஞ்சத்தடி என்னும் காரணப் பெயர் கொண்டு இன்றும் அழைக்கப்படுகின்றது. இவ்விடத்தில் பெரிய சந்நியாசியாரின் ஜீவசமாதி அமைக்கப்பட்டு தற்போது வேல் தாங்கிய மூவரைக் கொண்ட ஆலயமாகி அருணகிரிநாத சிவசுப்பிரமணியசுவாமி கோவிலாக விளங்குகின்றது. இத்தகைய காலத்தால் முற்பட்ட இணுவைத் திருமஞ்சம் சைவ உலகின் முதல் மஞ்சமாகவும் அற்புத வேலைப்பாடுகளுடன் கூடிய 40 அடி உயரத்தைக் கொண்டும் காணப்படும் சிற்பக் களஞ்சியமாகவும் திகழ்வதால் உலகப் பெருமஞ்சமாகப் போற்றப்படுகிறது.

கீழ் ஏழு உலகத்தையும், மேல் ஏழு உலகத்தையும் குறிக்கும் பிரபஞ்சத் தத்துவமாக 14 உலகங்களையும் தன்னகத்தே கொண்டு திகழ்வதாக ஆய்வுகள் கூறுகின்றன. இம்மஞ்சத்தில் காணப்படும் சிற்ப வேலைகள், கொத்து வேலைகள் போன்றவற்றை நவீன கருவிகளின் செயற்பாடற்ற அந்தக் காலத்தில் எப்படிச் செய்து முடித்தனர் என நோக்குகையில் அது திருவருளே என்று எண்ணத் தோன்றும்.

அது திருவருள்தான் என்பதை கீழ்வரும் சம்பவம் உணர்த்தும்.

இணுவைக் கந்தன் சந்நிதானத்தில் அன்னார் தியானத்தில் அமர்ந்திருந்த வேளையில் அவரது தியான நித்திரையில், தரிசனமாகக் கண்டதே, இத்திருமஞ்சம்: தான் தியானத்தில் கண்ட அற்புதத் திருமஞ்சத்தை ஏனைய அடியவர்களும் நிஜ உருவில் காண வேண்டும் என்னும் ஆசை மேலீட்டினால் இறைவனை வேண்டி அதற்கமைய அமையப் பெற்றதே இன்று நாம் காணும் திருமஞ்சம். மஞ்சத்துக்குத் தேவையான மரங்களை இணுவிலிலும் அயல் ஊர்களான தாவடி, சுதுமலை, உடுவில், சுன்னாகம், கோண்டாவில் ஆகிய பல ஊர்களிலும் தறித்துக் குவித்த சித்தருக்கு தான் கண்ட மஞ்சக் காட்சியை நிஜ, உருவில் சித்திரிக்கக்கூடிய சிற்பவல்லுநர்களை எங்கே தேடுவேன் என்ற கவலை மேலோங்கியிருந்தது.

அதே தருணத்தில் அன்னாரது நோய் பிணி நீக்கும் அருட்சக்தியால் அவரைத் தேடிச் சரணடைந்தவர்களில் ஒருவரான செய்யது என்னும் இஸ்லாமியப் பெரியவர் தனது உடற்பிணி மட்டுமல்லாது உளப்பிணியும் சந்நியாசியாரின் பார்வையால் தீர்ந்ததை எண்ணி உவகையுற்று அன்னார் மீது கொண்ட அளவு கடந்த பற்றினாலும், பக்தியினாலும் உந்தப் பெற்றவராய் சுவாமிகளின் மனதில் எழுந்த அருட்சிந்தனைக்கு தானும் பங்களிக்க எண்ணி தேவக்கோட்டையைச் சேர்ந்த முத்துராகப்ப ஆச்சாரிக்கு அஞ்சல் எழுதி மஞ்ச வேலையைப் பொறுப்பேற்கும்படி வேண்டினார்.

அவ்வஞ்சல் முத்துராகப்பருக்குக் கிடைத்த வேளையில் பெரிய சந்நியாசியார் தோற்றமுடைய ஒருவர் முத்துராகப்பரிடம் சென்று, யாழ்ப்பாணத்திலுள்ள இணுவில் கந்தசுவாமி கோவிலுக்கு மஞ்சம் செய்ய வேண்டி ஆளணியுடன் புறப்படுமாறு கூறி தான் திருச்செந்தூர் செல்லவிருப்பதாகவும் ஆதலால் உங்களுடன் வர இயலாது எனவும் கூறி என்னைக் காங்கேசன்துறையில் சந்திக்கலாமெனவும் கூறிச்சென்றார்.

மஞ்சம் செய்வதற்கு ஆளணி வேண்டுமேயென எண்ணிக்கொண்டிருந்த சந்நியாசியாரின் கனவில் முருகப்பெருமான் தோன்றி குறித்த தினத்தில் காங்கேசன்துறைக்குச் செல் அங்கு உன் குறை தீரும் எனப் பணித்தருளினார். இதற்கிணங்க இறைவன் ஆணைப்படி குறித்த தினத்தில் காங்கேசன்துறை துறைமுகத்தைச் சென்றடைய அங்கே கப்பல் மூலம் வந்திறங்கிய சிற்ப வல்லுநர்கள் நீங்கள் எம்மில்லம் வந்து கூறியமைக்கமைய நாம் இங்கு வந்துள்ளோம். நீங்களும் வந்து எங்களைச் சந்தித்தீர்கள் என சந்நியாசியாரிடம் கூறி அன்பு பாராட்டினர். சந்நியாசியாரோ மௌனியாகி'நான் இணுவிலை விட்டு எங்கும் போகவில்லையே இது இறைவன் செயற்பாடே' என எண்ணி உவகையுற்றார். சிற்பாசாரியார்களை வரவேற்று அழைத்துக் கொண்டு இணுவில் சென்று மஞ்ச வேலைகளை ஆரம்பித்தார். பெரிய சந்நியாசியார் சிற்பக் கலையினூடாக மஞ்சத்தினை நிறுவி ஆன்மீக சிந்தனையைத் தட்டி எழுப்பியதோடல்லாமல் கவின்கலைகளினூடாகவும் ஆன்மீக வெளிப்பாட்டை எடுத்துக் காட்டியுள்ளார். அன்னாரது காலத்தில் தேவார, திருவாசகங்களைக் கூட்டுப் பிரார்த்தனையாகப் பாடுவதன் மூலம் மக்கள் இறை உணர்வு பெற்றார்கள். அதே போன்று மஞ்சத் திருவிழாவின்போதும் மயில்ராவணன் இராமாயணம், வள்ளி திருமணம், நந்தனார் போன்ற புராண இதிகாச நாட்டு போன்ற கூத்துகளும், காவடி, கரகம், அனுமான் கூத்து போன்ற கூத்துகளும் வீர விளையாட்டுகளும் இடம்பெற்றன.

முன்பு தமிழரசர் காலத்தில் தமிழ்ச்சங்கம் அமைக்கப்பட்டு கலை கலாசாரங்கள் பாதுகாக்கப்பட்டன. அத்தமிழ்ச்சங்கத்துக்கு நிலபுலங்களும் மானியங்களும் வழங்கப்பட்டன. அந்த வகையில் இணுவில் கந்தன் ஆலயச்சூழலில் செகராசசேகர மன்னனின் மைத்துனனும் முதல் மந்திரியுமான அரசகேசரி என்பவனால் தமிழ்ச்சங்கம் அமைக்கப்பட்டது. அதற்கு சங்குவேலி என்னும் நிலப்பரப்பு அவனால் தானமாக வழங்கப்பட்டது. காலப்போக்கில் அவனால் உருவாக்கப்பட்ட தமிழ்ச்சங்கம் சிதைந்து போனாலும் மானியமாக வழங்கப்பட்ட சங்குவேலி நிலப்பரப்பில் நின்றும் நெல்லானது அறுவடை செய்யப்பட்டு, புதிர் எடுத்து தைப்பூசத்தன்று தமிழ்த் தெய்வமாம் இணுவைக் கந்தப் பெருமானுக்குப் பொங்கிப் படையலிடப்படுகின்றது. இச்செயலானது எமது முன்னோர் சரித்திரத்தையும் ஆன்மீகத்தையும் பறைசாற்றி நிற்கும் செயலாகக் கருதப்படுகின்றது. இவ்வருடத்துத் தைப்பூசத் திருவிழா இன்று வியாழக்கிழமை பூரணை நாளில் அமையப்பெற்றுள்ளது. அன்றைய தினம் காலை பாற்குடப்பவனியும், மதியம் பொங்கல் நிகழ்வும், மாலை 6.30 மணியளவில் திருமஞ்சத் திருவீதியுலாவும் இடம்பெறும். சிற்பத் திறனும் அழகு வர்ணமும் ஒளிரும் திருமஞ்சத்தில் ஆறுமுகப்பெருமான் வள்ளி, தெய்வானை சமேதரராய் வீற்றிருந்து, தவில் நாதஸ்வர இசை முழங்க, காவடிகளும் கூத்துகளும் புடைசூழ திருவீதியுலா காட்சியைக் காணக் கண்கோடி வேண்டும்.

**வேலையாட்கள் தேவை**

மேசன்,
தச்சுவேலை
உதவியாட்கள் தேவை.
077 553 3601, 071 693 3601

**வெற்றி திருமண சேவை**

யாழ் இந்து (கோ) 28 வயது பட்டதாரி மகளிற்கு உள்ளூர் அரச உத்தியோக மணமகன் தேவை. கனடாவில் வசிக்கும் 1986 இந்து (கோ) மணமகனுக்கு கனடாவில் வசிக்கும் மணமகள் தேவை எம்மிடம் இந்து கத்தோலிக்க உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் தேவைக்கு தொடர்பு:

Whatsapp: 074 089 5838.

பதிவுக் கட்டணம் இல்லை.

**விழிநீர் அஞ்சலி**

மலர்வு 15 • 05 • 1929



உதிர்வு 23 • 01 • 2024

**இசிதோர் சந்தியாப்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ்**

அன்பின் திருவுருவே - அப்பா
எட்ட முடியாத தொலைவு சென்று
ஆண்டுகள் ஓராயிரம் ஆகலாம்
காலங்கள் விடைபெறலாம்
நெஞ்சில் பதிந்த நினைவலைகள்
என்றென்றும் நம்மை விட்டு நீங்காது

தகவல்:
மருமகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

077 977 9706
077 284 5583

(CS 53508) S-1

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனக்கசப்புகள் நீங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். உறவினர்களால் ஆதாயமடைவீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்:** சில நேரங்களில் மன அமைதியற்ற நிலை ஏற்படும். நண்பர்கள் வகையில் திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். பணியாளர்களால் பிரச்சினை ஏற்பட வாய்ப்பு உள்ளது. விநாயகரை வழிபடுவது நன்மைகளை அதிகரிக்கும்.

**மிதுனம்:** மறைந்து கிடந்த திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். அனுகூலம் உண்டு. தன்னம்பிக்கை துளிர்விடும் நாள். உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய வாகனங்களை வாங்குவீர்கள். எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**சிம்மம்:** புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சி தங்கும். யோகா தியானத்தில் மனம் லயிக்கும். புதிய பாதை தெரியும் நாள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கன்னி:** எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். இலாபம் அடைவீர்கள். வாகனங்களைச் சரி செய்வீர்கள். உழைப்பால் உயரும் நாள். வழிபடத் தடைகள் விலகும். இழப்புகளைச் சரி செய்வீர்கள். நிம்மதி உண்டாகும். உற்சாகமான நாள்.

**துலாம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். காரியங்கள் வெற்றியடையும். வியாபாரத்தில் இலாபம் சம்பாதிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். தைரியம் கூடும் நாள்.

**விருச்சிகம் :** மனஉளைச்சல் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் மதிப்பார்கள்.

**தனுசு:** சோர்வு, களைப்பு வந்து நீங்கும். வேலைச்சுமை அதிகரிக்கும். அடுத்தவர்கள் மனம் காயப்படும்படி பேசாதீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் வேலை பார்க்க வேண்டி வரும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**மகரம்:** எளிதாக முடிய வேண்டிய சில காரியங்களை கூடப் போராடி முடிக்க வேண்டி வரும். உறவினர் நண்பர்களால் பிரச்சினைகள் வந்து செல்லும். அதிகம் உழைக்க வேண்டிய நாள். பொறுமையாக இருப்பது அவசியம்.

**கும்பம்:** உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். நண்பர்களால் ஆதாயம் பெருகும். பெற்றோரின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்னுரிமை கிடைக்கும். மரியாதை கூடும் நாள்.

**மீனம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம், பலவீனத்தை உணர்வீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். முயற்சியில் வெற்றிபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நிகழ்நிலைக் காப்பு ஆள்வோருக்கே பாதுகாப்பு!


நிகழ்நிலைக் காப்புச் சட்டவரைவை விவாதத்துக்கு எடுக்கக்கூடாது. அதிலுள்ள சில விடயங்கள் தொடர்பான முழுமையான தெளிவு தரப்படவேண்டும். பரிந்துரைத்த மாற்றங்களின் திருத்தப்பட்ட வடிவங்களும் எமக்கு வழங்கப்படவில்லை என்று எதிர்க்கட்சிகள் ஓரணியில் நின்று எதிர்ப்பை வெளிப்படுத்தியபோதிலும், அந்த எதிர்ப்பையெல்லாம் நீர்த்துப் போகச் செய்து சட்டவரைவுக்கு 'சட்ட அங்கீகாரத்தை' கொடுப்பதற்காக நாடாளுமன்றத்தில் விவாதத்தை ஆரம்பித்துள்ளது ரணிலை உயிராகவும், பெரமுனவை உடலாகவும்கொண்ட இந்த அரசாங்கம்.

சமூக வலைத்தளங்கள் ஊடாகவும், இணையங்கள் மூலமாகவும் மேற்கொள்ளப்படும் குற்றச்செயல்கள் அதிகரித்துவரும் நிலையில், அத்தகைய குற்றங்களில் இருந்து பெண்களையும், சிறுவர்களையும் பாதுகாப்பதே நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் பிரதான நோக்கம் என்று இந்தச் சட்டவரைவை நிறைவேற்றுவதன் பின்னாலுள்ள முழுமூச்சான செயற்பாட்டுக்கு அரசாங்கம் அர்த்தம் கற்பித்திருக்கின்றது. ஆனால், சட்டவரைவின் 57 பிரிவுகளில், வெறும் இரண்டே இரண்டு பிரிவுகளில் மட்டுமே சிறுவர்கள் மற்றும் பெண்களின் நலன்சார் திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. இதை நாடாளுமன்றத்தில் புள்ளி விவரங்களுடன் எதிர்க்கட்சிகள் வெளிப்படுத்தவும் செய்திருக்கின்றன.

இனி வரவிருப்பது தேர்தல் காலம். பெரமுனவுக்கு தற்போதிருக்கும் பரந்துபட்ட எதிர்ப்பலை தேர்தல் காலத்தின்போது சமூக வலைத்தளங்களில் பல மடங்கு வியாபிக்கக்கூடும். அதுவே யதார்த்தமும் ஆகும். அதிலும் ஜே.வி.பி.யினருக்கு தற்போதிருக்கும் எழுச்சி நிலை முழுக்கமுழுக்க சமூக வலைத்தளங்களின் வழியாகவே ஏற்பட்டது. அத்துடன் சமூக வலைத்தளங்கள் தற்போது பொழுதுபோக்கு அம்சங்களாக மட்டுமல்லாமல் தீர்க்கமான முடிவுகளை நோக்கி மக்களை உந்தித் தள்ளுவனவாகவும், திசை திருப்பங்களுக்கு வித்திடுவனவாகவும் அமைந்துள்ளன. இதற்கு எடுத்துக்காட்டாக 'அரகலய' போராட்டத்தைக் குறிப்பிடலாம்.

வீழ்த்தவே முடியாது என்றிருந்த பெரமுனவை வீழ்த்தியதும், 69 இலட்சம் சிங்கள - பௌத்த வாக்குகளால் அரியாசனத்தில் ஏறிய அசைக்கப்பட முடியாதவர் என்ற நிலையில் இருந்த முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவை விரட்டி வீட்டுக்கனுப்பியதும் இதே சமூகவலைத்தளங்கள்தான். ஆதலால், நிகழ்நிலைக் காப்புச்சட்டம் என்ற பெயரில் ஒரு பொதுப் பூட்டைப் போட்டுவிட்டால் அது தேர்தல் காலத்தில் தமக்கொரு அரணாக இருக்கும் என்பதே பெரமுனவினரதும் ரணிலினதும் வியூகம். இந்தச் சட்டவரைவு இவ்வளவு துரிதமாக விவாதத்துக்கு எடுக்கப்படுவதும் - அதை நிறைவேற்றுவதில் காட்டப்படும் அவசரத்தனமான நகர்வுகளும் இதையேதான் காட்டுகின்றன.

இவை அனைத்தையும் ஒரு நேர்கோட்டில் வைத்துப்பார்த்தால், பெரமுன அரசாங்கம் இதுவரை காலமும் கொண்டுவந்த சட்டவரைவுகளில் பேராபத்தான தன்மைமிக்கது இந்த நிகழ்நிலைக் காப்புச் சட்டவரைவு என்பது புலப்படும். ஆதலால், அது நிறைவேற்றப்பட முன்னர் ஒன்றுதிரண்டு அதை எதிர்த்து தூரமாகத் தூக்கிப்போட வேண்டியது எதிர்க்கட்சிகளினதும் மக்களினதும் பொதுப்பொறுப்பு.




# அரசாங்கத்தின் இருப்பை பாதுகாக்கத் தீவிர முயற்சி!

ஹக்கீம் குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜன. 25**

**நிகழ்நிலைக்காப்புச் சட்டவரைவின்மூலம் அரசாங்கத்தின் இருப்பைப் பாதுகாக்கத் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹக்கீம் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய ஹக்கீம் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பாக வெளியிடப்படும் மோசமான விடயங்களைத் தடுப்பதற்கு இந்தச் சட்டவரையைக் கொண்டுவருவதாக அரசாங்கம் தெரிவித்தாலும் சட்டவரைவிலுள்ள 57 பிரிவுகளில் 2 பிரிவுகளில் மாத்திரம் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் விடயங்கள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. ஏனைய விடயங்களும் வலைத்தளங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகவும், அரசியல் விமர்சனங்களைக் கட்டுப்படுத்தும் முயற்சியாகவுமே இருக்கின்றன - என்றார். (ம)

## தலதா மாளிகைக்கு காத்திருக்கும் ஆபத்து

கொழும்பு, ஜன. 25

பலத்த மழையின்போது கண்டி உடவத்த வன பிரதேசத்திலிருந்து வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் ஸ்ரீதலதா மாளிகை, ஆளுநர் அலுவலகம் உட்படப் பல அரச நிறுவனங்களுக்கு சேதம் ஏற்படும் அபாயம் உள்ளதாக ஆளுநர் லலித் யு.கமகே தெரிவித்துள்ளார். வனபாதுகாப்பு திணைக்களப் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட ஏனைய அதிகாரிகள் இது தொடர்பில் அவசர நடவடிக்கை எடுக்கும் படியும் ஆளுநர் அவர்களுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார். (ம)

## ஆசிரிய உதவியாளர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்!

வடிவேல் சுரேஷ் வலியுறுத்து

ஆசிரிய உதவியாளர்களுக்குரிய நிரந்தர நியமனம் வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான வடிவேல் சுரேஷ் வலியுறுத்தியுள்ளார். தொடர்ந்தும் ஆசிரிய உதவியாளர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. பல வருட காலமாக உதவி ஆசிரியர்களாகப் பணிபுரிந்தும் கூட அவர்களை நிரந்தர சேவையில் இணைக்காமல் இருப்பதினாலும் அவர்களுக்குரிய முறையான கொடுப்பனவு வழங்கப்படாமையினாலும் பல இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ம)

## 6 மீனவர்கள் கைது

நெடுந்தீவு, ஜன. 25

யாழ். நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட ஆறு இந்திய மீனவர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். (ப-66)

## 50,000 வீடுகளுக்கு விரைவில் அனுமதி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்ட முன்மொழிவின் கீழ் 50,000 வீட்டு உரிமைப் பத்திரங்களை வழங்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதியைப் பெறுவதற்கான அமைச்சரவைப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த அமைச்சரவைப்பத்திரத்தில், வீட்டு உரிமைப் பத்திரங்களை வழங்கும்போது வீட்டு உரிமையாளர்கள் செலுத்தவேண்டிய நொத்தாரிசுக் கட்டணம், முத்திரைக் கட்டணம் மற்றும் பிற வரிகளுக்குச் செலவிடப்படும் தொகை திறைசேரியால் ஏற்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

**நாளை**

26.01.2024
**வெள்ளிக்கிழமை**
**தை 12**
சுபநேரம் : 6.36 - 08.06
ராகுகாலம் : 11.06 - 12.36

**நாளொரு நல்வார்த்தை**

பெரிய எண்ணங்களை சிந்தனை செய்;
ஆனால் சிறிய இன்பங்களுக்கு
சந்தோஷப்படு.
- ஜாக்சன் பிரவுன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்நிறுத்தத்துக்கு இஸ்ரேல் அழைப்பு



டெல்அவிவ், ஜன. 25

**ஹமாஸின் பிடியிலுள்ள அனைத்து இஸ்ரேலியப் பயணக்கைதிகளையும் விடுவித்தால், இரண்டு மாதகாலம் போர்நிறுத்தம் செய்யலாம் என்ற நிபந்தனையை இஸ்ரேல் முன்வைத்துள்ளது.**

காஸாவில் இஸ்ரேலின் மும்முனைத் தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.
ஹமாஸின் சுரங்கங்களைத் தேடிவரும் இஸ்ரேல் மறுமுனையில், பயணக்கைதிகளை மீட்கும் நடவடிக்கையிலும் தீவிரம் காட்டி வருகின்றது. எனினும், பயணக்கைதிகளை ஹமாஸ் எங்கு வைத்திருக்கின்றது என்பது இன்னமும் கண்டறியப்படவில்லை. இதற்கிடையே, காஸாவில் நிரந்தரமான போர் நிறுத்தத்தை ஏற்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தி அண்மையில் ஐந்தாம் கட்டப் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டன.
இந்தப் பின்னணியில், ஹமாஸின் பிடியிலுள்ள அனைத்து இஸ்ரேலியப் பயணக்கைதிகளையும் விடுவித்தால், 2 மாதகாலம் போர்நிறுத்தம் செய்யலாம் என்ற நிபந்தனையை இஸ்ரேல் முன்வைத்துள்ளது. (ம)



# இலவச உணவுக்காக அலைமோதும் மக்கள்

## சுவிட்ஸர்லாந்தில் இந்த நிலை

சூரிச், ஜன. 25

உலகில் மிகவும் பணக்கார நாடுகளில் ஒன்றான சுவிட்ஸர்லாந்தில், இலவச உணவைப் பெறுவதற்காக மக்கள் அலைமோதுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
செல்வந்த நாடான சுவிட்ஸர்லாந்து, மக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைத்துள்ள நாடாகவும் அறியப்படுகின்றது. அங்குள்ள மக்கள் மிகவும் அமைதியாகவும் சுமுகமாகவும் வாழ்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், அண்மைக்காலமாக சுவிட்ஸர்லாந்தில் மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள நிலையில் அவர்கள் அரசின் மானிய உணவுகளையும், சமைத்த இலவச உணவுகளையும் பெற்றுக்கொள்ளப் போட்டியிடுகின்றனர் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)



# உயிர்பெறும் ஷோம்பி

ஒட்டாவா, ஜன. 25

ஆர்ட்டிக் மற்றும் பிற இடங்களில் பனிக்கட்டிகளுக்கு அடியில் புதைந்து கிடக்கும் வைரஸ்களால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.
உலகில் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக செயலற்று இருக்கும் வைரஸ்கள் ஷோம்பி வைரஸ் என்று அழைக்கப்படுகின்றன.
இந்த நிலையில் 48 ஆயிரத்து 500 ஆண்டுகளாக செயலிழந்து பனிக்கட்டிகளில் புதைந்திருந்த ஷோம்பி வைரஸ்களை ஆராய்ச்சியாளர்கள் கடந்த 2022ஆம் ஆண்டு கண்டறிந்தனர்.
தற்போது பனிக்கட்டிகள் விரைவாக உருகுவதால், ஷோம்பி வைரஸ் வெளியே வர வாய்ப்பு உள்ளது என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். (ம)

# ஹமாஸ் தாக்குதல் இஸ்ரேல் படை பலி

டெல்அவிவ், ஜன. 25

காஸாவில் ஹமாஸ் அமைப்பு நேற்று மேற்கொண்ட தாக்குதலில், இஸ்ரேலியச் சிப்பாய்கள் 24 பேர் கொல்லப்பட்டனர்.
காஸாவுக்குள் இஸ்ரேல் படைகள் ஊடுருவியதன் பின்னர் ஹமாஸ் அமைப்பால் நடத்தப்பட்ட மிகப்பெரிய தாக்குதலாக இது கருதப்படுகின்றது.
காஸாவின் மத்திய பகுதியில் நடந்த இந்தத் தாக்குதலில் 24க்கும் மேற்பட்ட படையினரை தாம் இழந்திருப்பதாக இஸ்ரேல் இராணுவப் பேச்சாளர் கூறியுள்ளார். (ம)

# ஜெயலலிதாவின் சொத்துகளை தமிழக அரசிடம் ஒப்படைக்குக

## நீதிமன்றம் பரபரப்பு உத்தரவு

சென்னை, ஜன. 25

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் பறிமுதல் செய்யப்பட்ட தங்க, வைர நகைகள் மற்றும் வெள்ளிப் பொருள்களை தமிழக அரசிடம் ஒப்படைக்க கர்நாடக அரசுக்கு பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
கடந்த 1991ஆம் ஆண்டுமுதல் 1996ஆம் ஆண்டு வரை தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா மீது வருமானத்துக்கு அதிகமாக 66 கோடி ரூபா சொத்துக் குவித்ததாக வழக்குத் தொடரப்பட்டது.
இதையடுத்து தமிழக லஞ்ச ஒழிப்புத்துறை பொலிஸார், ஜெயலலிதாவின் இல்லத்தில் நடத்திய சோதனையில் தங்க நகைகள், வைர நகைகள், வெள்ளிப் பொருள்கள், ரத்தினக் கற்கள், கைக்கடிகாரங்கள் உட்பட ஏராளமான பொருள்களை பறிமுதல் செய்தனர்.
இந்த வழக்கை விசாரித்த பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் கடந்த 2014ஆம் ஆண்டு ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகிய நால்வரும் குற்றவாளிகள் என்று அறிவித்தது.
இதனால், ஜெயலலிதாவின் சொத்துகளை கர்நாடக அரசிடம் ஒப்படைக்கவேண்டும் என்று பொதுநல வழக்குத் தொடரப்பட்டது.
இதையடுத்தே அந்தச் சொத்துகள் தமிழக அரசுக்கு உரியவை என்றும் தமிழக அரசிடம் பாரப்படுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# மொறிசன் ஓய்வு

கான்பெரா, ஜன. 25

அவுஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் ஸ்கொட் மொறிசன் அரசியலில் இருந்து ஓய்வு பெற முடிவு செய்துள்ளார்.
பெப்ரவரி மாதத்தின் இறுதியில் நாடாளுமன்றத்தைவிட்டு வெளியேற உள்ளதாகவும் அவர் கூறினார்.
2007ஆம் ஆண்டு நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்கொட் மொறிசன், 2018ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரை நாட்டின் பிரதமராகப் பதவி வகித்தார்.
தனிப்பட்ட வாழ்வில் நேரத்தைச் செலவிட வேண்டியுள்ளதால் இந்த முடிவெடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ம)



# 12 அயோத்தி இராமர் சிலைக்கு கிலோவில் தங்கப்பாதணி

புதுடில்லி, ஜன. 25

அயோத்தி ராமர் சிலைக்கு 12 கிலோ 600 கிராம் எடையில் ஒரு சோடி தங்கப் பாதணி தெலுங்கானாவிலிருந்து தயார் செய்து பொருத்தப்பட்டுள்ளது. இந்தப் பாதணியை 6 பேர் கொண்ட கலைஞர்கள் 25 நாள்களாக தயார் செய்திருந்தனர். (ச-இ)

# ரஷ்ய விமானம் விபத்து; 65 பேர் சாவு

மொஸ்கோ, ஜன. 25

உக்ரைன் தெற்குப் பகுதியில் ரஷ்ய இராணுவப் போக்குவரத்து விமானமொன்று விபத்துக்குள்ளானதில் விமானத்தில் பயணித்த 65 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.
விமானத்தில் 74 பேர் இருந்தனர் எனவும் அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என்றும் வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. உயிரிழந்தவர்கள் 65 உக்ரேனிய போர் கைதிகள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் 18ஆவது நினைவு தினம்



சுட்டுப்படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் சு.சுகிர்தராஜனின் 18ஆவது நினைவு தினம் வவுனியா ஊடக அமையத்தில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.
சுகிர்தராஜனின் திருவுருவப்படத்துக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. வவுனியா ஊடக அமையத்தின் தலைவர் கு.கோகுலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஊடகவியலாளர்கள் பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.
ஊடகவியலாளர் சுகிர்தராஜன் 2006 ஆம் ஆண்டு திருகோணமலையில் சுட்டுப் படுகொலைசெய்யப்பட்டார். இதுவரை அவரது படுகொலையுடன் தொடர்புடையவர்கள் தண்டிக்கப்படவில்லை. திருகோணமலையில் 5 மாணவர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தை வெளிக்கொணர்வதில் சுகிர்தராஜன் பெரும் பங்காற்றியிருந்தார். (எ-110)

## அறநெறி பாடசாலைக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், ஜன.25
தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய அறநெறி பாடசாலைக் கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
செல்வச் சந்நிதி ஆலயத்தின் கிழக்கு வீதிக்கு அருகில் அமைந்துள்ள ஆலயத்துக்குச் சொந்தமான இடத்தில் இந்த அறநெறிப்பாடசாலைக்கான கட்டடம் அமைக்கப்படவுள்ளது. (எ-100)


## தைப்பூச பால்குட பவனி

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலுக்கெனப் புதிதாக அமைக்கப்பட்ட 24 அடி உயரம் கொண்ட புதிய திருமஞ்சத்தில் தைப்பூசத் திருநாளான இன்று வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் மாவைக் கந்தப் பெருமான் திருவீதி உலா வரவுள்ளார்.
அதை முன்னிட்டுப் பால்குட பவனி இன்று மாலை 3 மணிக்கு கிழக்கு வில்லு மண்டபத்தில் ஆரம்பமாகி ஆலய ரதவீதி ஊடாக வலம் வந்து முருகப் பெருமானுக்கு அபிஷேகம் நடைபெறும். பால்குட பவனியில் பங்குகொள்ள விரும்பும் அடியவர்கள் மாலை 3 மணிக்கு முன்னர் ஆலயத்துக்கு வரவேண்டும் என்று மாவை ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ து.ஷ. இரத்தின சபாபதிக் குருக்கள் தெரிவித்துள்ளார். (எ-66)

# நிகழ்நிலை காப்புச் சட்டம் இன்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜன.25
இலங்கை அரசின் திட்டமிட்ட ஊடக அடக்குமுறைகள் மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கு எதிரான நடவடிக்கைகளைக் கண்டித்து யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் சுதந்திர ஊடக இயக்கம் உள்ளிட்ட தென்னிலங்கை ஊடக அமைப்புக்களின் பங்கேற்புடன் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் அனைவரும் அணிதிரள வேண்டும் என்று யாழ். ஊடக அமையம் அழைப்பு விடுத்துள்ளது. (எ-66)





## தைப்பூச அபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன.25
உரும்பிராய் காளி அம்பாள் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9,30 மணியளவில் தைப்பூச அபிஷேகம் இடம்பெறும். தொடர்ந்து அம்பாள் உள்வீதி உலா வரும் திருக்காட்சியும் நடைபெறும். (எ-66)

## ஏடு தொடக்கல்

யாழ்ப்பாணம், ஜன.25
தைப்பூசத் திருநாளை முன்னிட்டுதெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை காலை 8 மணியளவில் சிறப்புப் பூசை வழிபாடுகள் நடைபெறும்.
அதைத் தொடர்ந்து காலை 8.30 மணியளவில் ஆலயத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் சிறார்களுக்கு ஏடுதொடக்கும் நிகழ்வு ஆரம்பமாகி இடம்பெறும். (எ-66)

## பல்லாயிரம் அடியார்கள் சூழ நாகபூஷணி அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன.25
வரலாற்றுச் சிறப்புமிக்க 64 சக்திபீடங்களில் ஒன்றான நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்றுச் சிறப்பாக இடம்பெற்றது. புலம்பெயர் தமிழர்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் என பல்லாயிரக்கணக்கான பக்த அடியார்கள் கும்பாபிஷேகத்தில் திரண்டனர்.
கடந்த 17ஆம் திகதி கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டன. கடந்த 21ஆம் திகதி நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனுக்கு உரிய தூபதீபம், யந்திர ஸ்தாபனங்கள், பரிவார மூர்த்திகள், பிரம்ஸ்தாபனம், அர்த்தபந்தண சாத்தப்பட்டு, 22 மற்றும் 23ஆம் திகதிகளில் எண்ணைக்காப்பு சாத்தப்பட்டது. நேற்று முற்பகல் 9.38 முதல் மு.ப. 11.20 மணிமுதல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேகக் கிரியைகளை சிவஸ்ரீ ப.மு.பாலகுமாரக் குருக்கள் தலைமையிலான 37 [illegible] செய்தனர். (எ-66)

### பொது அறிவித்தல்
### வலிகாமம் வடக்கு பிரதேச சபை
### 2024ம் ஆண்டிற்கான ஆதன வரி செலுத்துதல்

2024ம் ஆண்டிற்கான ஆதன வரியினை செலுத்துவதனை இலகுபடுத்தும் நோக்கில் சபையின் கீழுள்ள உப அலுவலகங்கள் 2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 27,28 ஆகிய சனி மற்றும் ஞாயிறு தினங்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை திறந்திருக்கும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**குறிப்பு:** 2024ம் ஆண்டுக்குரிய ஆதன வரியினை 2024.01.31ம் திகதிக்குள் செலுத்தும் பொதுமக்களுக்கு 2024ம் ஆண்டு ஆதனவரியின் 10% கழிவு வழங்கப்படும்

**சு.சுதர்ஜன்**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை.**
**25.01.2024**

### பணியாளர் தேவை

வடக்கு மாகாணத்தில் பணியாற்றக்கூடிய கம்பனி ஒன்றுக்கு 25-50 வயதுக்குட்பட்ட வேலை அனுபவமுள்ள இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். அடிப்படைச் சம்பளம் 35000 அத்துடன் மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்.

**விண்ணப்ப இறுதித்திகதி: 30.01.2024 வரை**

**தொடர்புகளுக்கு: 024 434 6557**
**மின்னஞ்சல் முகவரி: csclanka@gmail.com**

### 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 18 | 27 |
| 03 | 12 |
| 1941 | 2023 |



**திரு.சிவபாதசுந்தரம் சுந்தரேசன்**
**(Bsc, Dip.in.Education)**
ஓய்வு பெற்ற St.Henry's College, இளவாலை ஆசிரியரும் ஓய்வு பெற்ற பலாலி ஆசிரியர் கலாசாலை விஞ்ஞான விரிவுரையாளரும், கொழும்பு இந்துக் கல்லூரி, யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவரும்.

கொழும்பை பிறப்பிடமாகவும், வியாபாரிமூலை புலோலி யை பூர்வீகமாகவும் கொண்ட திரு.சிவபாதசுந்தரம் சுந்தரேசன் அவர்கள் 27.12.2023 அன்று இறைவனடி சேர்ந்தார்.
என் அன்புக் கணவரின் மறைவு செய்தி அறிந்து நேரில் வருகை தந்தோர், தொலைபேசி மூலமாகவும், சமூக வலைத்தளம் மூலமாகவும் எமக்கு இரங்கல் செய்தி அனுப்பியும், ஆறுதல் தந்தும், பல வழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது குடும்பத்தினர் அனைவர் சார்பிலும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


அன்னாரின் 31ம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசனமும் கொழும்பு வெள்ளவத்தை தமிழ்ச்சங்க மண்டபத்தில் 26.01.2024 அன்று நடைபெறும்.
அந் நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்பத்தினர் சகிதம் வருகைதந்து பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

**அன்பே உருவமான எங்கள் குடும்ப விளக்கே**
**உங்கள் இனிமையான முகமும் பண்பான பேச்சையும்,**
**அரவணைப்பையும் இழந்து நிற்கும் உங்கள்**
**அன்பு மனைவி பத்ம ஜோதியும், குடும்பத்தினரும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடிபொருள் தகவலை வழங்கினால் சன்மானம்

சட்டவிரோத துப்பாக்கிகள் மற்றும் வெடிகுண்டுகள் தொடர்பில் தகவல் வழங்குபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர். இதுதொடர்பான அறிவுறுத்தல்கள், அனைத்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், பிரதேச அதிகாரிகள் மற்றும் பணிப் பாளர்களுக்கு பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனால் வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)



## போதைப்பொருளுடன் ரக்பி பயிற்றுநர் கைது

கொழும்பு, ஜன. 25

பாடசாலை ரக்பி பயிற்றுவிப்பாளர் ஒருவர் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடமிருந்து 4 ஆயிரத்து 100 போதை மாத்திரைகள், 2 கிராம் ஹெரோய்ன் என்பன கைப்பற்றப் பட்டன. (ச-இ)

## ஓட்டோச் சாரதிகளுக்கு தொழில்திறன் விருத்தி

### அரசாங்கம் நிதியொதுக்கீடு

கொழும்பு, ஜன. 25

நாடுமுழுவதுமுள்ள முச்சக்கர வண்டிச் சாரதிகளின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக பகுதி நேர வேலைவாய்ப்புத் திட்டமொன்றை இந்த வருடத்தில் அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்திருந்த நிலையில், இதற்காக ஐந்து மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## ஆதனவரிக்கு விலைக்கழிவு

யாழ்ப்பாணம், ஜன. 25

சாவகச்சேரி பிரதேச சபையின் உப அலுவலகங்களான நாவற்குழி, கைதடி எல்லைக்குட்பட்டவர்கள் ஆதனவரிகளை இந்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்பாக செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த காலப்பகுதிக்குள் ஆதனவரி செலுத்தும் பட்சத்தில் அதற்கான விலைக்கழிவு கிடைக்கப்பெறும் என்று பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார். ஆதனவரி செலுத்த வருகைதரும்போது தங்கள் ஆதனவரி இலக்கத்துடன் வருமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-131)


## பெயர் மாற்றம்

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தில் வசிக்கும் **இராசையா இரத்தினசிங்கம்** ஆகிய நான் எனது பெயரை **இராசையா செல்வநாதன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **இராசையா செல்வநாதன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(cs.53410) (N.1) **இராசையா செல்வநாதன்**

## பெயர்மாற்றம்

நாவலடி ஒழுங்கை வீரமானிக்கதேவன்துறை மயிலிட்டியில் வசிக்கும் **ஆனந்தசோதி நவநீதராம்பை** ஆகிய எனது பெயரை **ஆனந்தசோதி நவநீதம்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **ஆனந்தசோதி நவநீதம்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகிறேன்.

ஆனந்தசோதி நவநீதம்

(CS 27740 V-1)


## தனியார் ஊழியருக்கு அதிகளவான ஊதியம்

### தொழில் அமைச்சு முன்மொழிவு

கொழும்பு, ஜன. 25

தனியார்துறை ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை உயர்த்துவதற்கு தொழில் அமைச்சால் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அதன்படி அவர்களது குறைந்தபட்ச ஊதியத்தை 12 ஆயிரத்து 500 ரூபாவிலிருந்து 21 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது. (ச-இ)

## தைப்பூச வழிபாடுகள்

யாழ்ப்பாணம், ஜன. 25

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் தைப்பூசத்தை முன்னிட்டு இன்று காலை 9 மணிக்கு சிறப்பு பூசை வழிபாடுகளுடன் உருத்திரா அபிஷேகம் இடம்பெற்று சுவாமி வீதியுலா வரவுள்ளார்.

* * * *

வண்ணை சாந்தையர்மடம் கற்பக விநாயகர் ஆலயத்தில் தைப்பூசத்தை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு சிறுவர்களுக்கு ஏடு தொடக்கும் நிகழ்வு இடம்பெறும். பிற்பகல் 4 மணிக்கு சிறப்பு பூசை அபிஷேகம் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

* * * *

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் தைப்பூச வழிபாடுகள் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். தொடர்ந்து இரவு 7 மணிக்கு முருகப்பெருமான் திருமஞ்சத்தில் வீதிவலம் வருவார்.

* * * *

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் தைப்பூசத்தை முன்னிட்டு சிறப்பு வழிபாடுகளைத் தொடர்ந்து மாலை 5 மணிக்கு முருகப்பெருமான் திருமஞ்சத்தில் ஆரோகணித்து வீதிவலம் வரவுள்ளார். (பு-17)


## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 11 . 1940



மறைவு 23 . 01 . 2024

### சிவகுருநாதர் சிவசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

கந்தர்மடம் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவர் சிவகுருநாதர் சிவசுப்பிரமணியம் நேற்றுமுன்தினம் (23.01.2024) செவ்வாய்க்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுருநாதர் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மகாதேவா விஜியலக்சுமியின் அன்புச் சகோதரனும், புஸ்பலோசனியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற புஸ்பலீலாவதி மற்றும் புஸ்பநாதன், புஸ்பராசா (கொலண்ட்), காலஞ்சென்ற புஸ்பகாந்தன் மற்றும் புஸ்பாகரன், புஸ்பராணி, புஸ்பராதா ஆகியோரின் மைத்துனரும், பிரபாகர் (UK) பாஸ்கர் (UK), ஸ்ரீதர் (ஆசிரிய ஆலோசகர் - வலிகாமம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதர்சினி, துசானி, சிவரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், தருணி, பிரவீன், குருபரன், நித்தீஸ், ஏஞ்சலா, ஆதிரா, ஜீவினி, அபிராம், ஓவியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.01.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லதில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

133, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS53661) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 05 . 1929



மறைவு 23 . 01 . 2024

### இசிதோர் சந்தியாப்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ்

பலாலி தெற்கு, வசாவிளானைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் தெற்கு, மாதா கோவிலடியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இசிதோர் சந்தியாப்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ் அவர்கள் நேற்றுமுன்தினம் (23.01.2024) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இசிதோர் இன்னேசு தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சில்வெஸ்ரர் ஞானம்மா மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிறுமலர் இராசமணியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற ஆசைப்பிள்ளை சலோமை, அரியமுத்து ஆரோக்கியம், சின்னமணி அருளம்மா மற்றும் சூசைப்பிள்ளை அரியகுட்டி, சின்னக்கிளி மங்களம், காலஞ்சென்ற திருச்செல்வம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற பர்னாந்து, சவிராசி, சலோமை, அக்காசீ, ரத்னம் ஞானமுத்து, லூர்த்தம்மா, அருளப்பு ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான யோசேப் மனோகரன், அமலதாஸ் மற்றும் ஜெருசலேம் (பட்டு) ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்திமா அமலமேரி, வதனா, ஆனந்தி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அருள் நிஷாந்த், அருள் பிரஷாந்த், அமல நிஷாந்தினி, அருள் றொஷாந்த், கார்மேல் சங்கீதா ஆகியோரின் அன்புப் பேரனும், நிருத்திகன், அபிஷாந்த், அபினாஷ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (25.01.2024) வியாழக் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கோப்பாய் தூய மரியன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கோப்பாய் புனித மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன் (பட்டு) குடும்பத்தினர்
077 618 6556

(CS 53662) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் பரிசுக்குப் பதிவு

சாவகச்சேரி, ஜன. 25

தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு இலங்கை வங்கி சாவகச்சேரி கிளையால் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

மாணவர்கள் இல ங்கை வங்கி சாவகச்சேரி கிளையில் விண்ணப்பப்படி வங்க ளைப் பெற்று பதிவு செய்யுமாறு இலங்கை வங்கியின் கிளை முகாமையாளர் அறிவித்துள்ளார். (ச-131)

## கணவரை...

பாஷையூர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மார்க் வெஸ்லி அலன் கத்தரின் என்பவரே உயிரிழந்தவராவார்.

அதிகாலை 4.30 மணியளவில் இந்த விபத்துச் சம்பவம் நடந்துள்ளது. வவுனியா நோக்கி அதிவேகமாகப் பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ், வீதியைக் கடந்த எருமை மாடுகளை மோதி விபத்துக்குள்ளானது. இதனால் கட்டுப்பாட்டை இழந்த பஸ், எருமைகளை மோதிய வேகத்தோடு எதிர்த்திசையில் வந்த ஹைஏஸ் வாகனத்தையும் பந்தாடிச் சின்னாபின்னமாக்கியது.

இந்த விபத்தில் சிக்கி, ஹைஏஸ் வாகனத்தில் பயணித்த பெண்ணே உயிரிழந்தார். ஆசிரியையான இவர் வெளிநாடு செல்லும் தனது கணவரையும், மகனையும் விமான நிலையம் சென்று வழியனுப்பி விட்டுத் திரும்பும்போதே இவர் விபத்தில் சிக்கியுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவத்தில் இரு சிறுவர்கள் உட்பட 8 பேர் படுகாயமடைந்துள்ளனர். படுகாயமடைந்தவர்கள் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். எருமை மாடுகளைக் கொண்டுவந்தவரும் விபத்தில் சிக்கி படுகாயமடைந்துள்ள நிலையில், அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில் 9 எருமை மாடுகள் உயிரிழந்துள்ளன. நான்கு மாடுகள் நடக்க முடியாதவாறு படுகாயமடைந்துள்ளன.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாகக் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-113-9)

## ரணிலின்...

உரிமையைக் கடுமையாக அச்சுறுத்தும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

முன்மொழியப்பட்ட சட்டம் இணைய வழித் துன்புறுத்தல், துஷ்பிரயோகம் மற்றும் மோசடி ஆகியவற்றுக்கு எதிராகப் பாதுகாப்பை வழங்குகிறது.

ஜனாதிபதியால் நியமிக்கப்படும் குழுவே போலிச்செய்திகள், தகவல்கள் எவை என்பதைத் தீர்மானிக்கும். ஆணைக்குழு நியமித்த 'நிபுணர்களுக்கு' சந்தேக நபர்களின் வளாகத்துக்குள் நுழைந்து சோதனையிட அதிகாரம் அளிக்கப்படும். சட்டத்தின் கீழ் குற்றங்களுக்கு அதிக அபராதம் மற்றும் ஐந்து ஆண்டுகள்வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அலுவலகம், இந்தச் சட்டம் கிட்டத்தட்ட அனைத்து வகையான சட்டபூர்வமான வெளிப்பாட்டையும் குற்றமாக்கக்கூடும், இது கருத்துச் சுதந்திரத்தின் மீது பெரும் விளைவை ஏற்படுத்தும் சூழலை உருவாக்குகிறது என்று கூறியுள்ளது.

இலங்கையின் அடக்குமுறைச் சட்டங்கள் பல தசாப்தங்களாக பரவலான மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுத்தது மற்றும் பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்கு பங்களித்துள்ளது. ஆட்சிக்கு வந்ததில் இருந்து, ஜனாதிபதி ரணில் அதிருப்தியை அடக்குவதற்கான முயற்சிகளை முன்னெடுத்துள்ளார். நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதுபேரழிவுதரும்பின்னடைவாக இருக்கும் - என்றார். (அ-எ-இ)

## பயங்கரவாத...

யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. அப்போது சபாநாயகர் அறிவிப் பின்போது, அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் சபையில் விடுத்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஆறு மனுக்களுக்கு மேலதிகமாக அரசமைப்பின் 121(1) ஆம் உறுப்புரிமையின் பிரகாரம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு தொடர்பாக உயர்நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேலும் 18 மனுக்களின் பிரதிகள் எனக்குக் கிடைத்துள்ளன.

அரசமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை எனும் சட்ட வரைவு தொடர்பாக உயர் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மேலும் ஐந்து மனுக்களின் பிரதிகளும் எனக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று சபாநாயகர் தெரிவித்தார். (அ-எ-இ)

## புதிய...

தெரிவித்துள்ளதாவது:-

நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க வேண்டும். நிகழ்நிலை காப்புச் சட்ட வரைவு தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான அமைப்புகள்பலயோசனைகளைமுன்வைத்துள்ள போதும் அரசாங்கம் அதைக் கவனத்தில் கொள்ளவில்லை.

சமூக ஊடகங்கள் கண்காணிக்கப் படவேண்டும் என்பதை ஏற்கின்றோம். இந்தச் சட்டவரைவு கண்காணிப்புக்குப் பதிலாக அடக்குமுறையையே பிரதான நோக்கமாக கொண்டுள்ளது. எமது அரசாங்கத்தில் இந்தச் சட்டம் முழுமையாக நீக்கப்பட்டு, அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் சட்டம் இயற்றப்படும்.

இந்தச் சட்டவரைவில் சமூக வலைத்தளங்கள் குற்றவாளியாக்கப்பட்டுள்ளன. சமூக வலைத்தளங்களில் தவறான கருத்துகளைப் பதிவேற்றம் செய்பவர்கள் குற்றவாளியாக பார்க்கப்பட வேண்டும். சமூக வலைத்தளங்களை குற்றவாளிகளாகச் சித்திரிப்பதை மெட்டா, கூகுள், யூரியூப் உள்ளிட்ட நிறுவனங்கள் கடுமையாக விமர்சித்துள்ளன. இந்தச் சட்ட வரைவால் கிராமிய மற்றும் நகர வணிக பொருளாதாரம் பாதிக்கப்படும் - என்றார். (அ-எ-இ)

## 11 ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
06.09.1990

ஆண்டவன் பாதத்தில்
26.01.2013



**அமரர் செல்வி தனராஜா துளசிகா (துளசி)**

**(கலைப்பீட 2 ஆம் வருட மாணவி யாழ். பல்கலைக்கழகம் - 2013)**

**திதி: பூரணை**

**அம்மா துளசி ......**

உன்னை இழந்து பதினொரு ஆண்டுகள்
ஆனாலும் உன் நினைவுகள் எம்மை விட்டு
போவதில்லை நாம் மண்ணில் மடியும் வரை.

கண்ணுக்கு புலப்படாமல்தான் சென்றுவிட்டாயே மகளே துளசி

உன்னை நினைக்கும் கணங்கள் தோறும் கண்கள் காட்டாறாக மாறுகிறதே
அன்பு மகளே துளசி!

இன்றளவும் உன்னை தொலைத்த நாட்களில் இருந்து மீள முடியாமல் தவிக்கும்
தந்தையாக்கி உலவ விட்டாயே மகளே!

காலம் போடும் கணக்கை இறைவனைத் தவிர யாராலும் மாற்ற முடியாது ஆனால்
அந்த இறைவனும் இரங்கவில்லை துளசியம்மா!

தண்ணீர் இல்லாத குளத்தில் தத்தளிக்கும் மீன் போல் என் மகள் இல்லாத உலகில்
தவிக்கின்றோம்

மகளே உன் ஆத்மா சாந்தியடைந்து மறு பிறப்பெடுத்து எம்மை பார்க்க
வெகு சீக்கிரம் வாருமம்மா என் மகளே துளிசி!

**ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!**

**45/ A3, ஞானவைரவர் லேன்,**
**பலாலி வீதி, கோண்டாவில்.**

**குடும்பத்தினர்**
**(தாய்,தந்தை, சகோதரர்கள், மைத்துனிமார்)**

## வங்குரோத்து...

சட்டத்தால் சர்வதேச ஆதரவை இழக்க நேரிடும். இந்தச் சட்ட வரைவு நிறைவேற்றப்பட்டால் முழு சர்வதேசமும் எதிர்ப்பை வெளியிடும். கூகுள், மெட்டா உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. நாட்டை வங்குரோத்து அடையவைத்துவிட்டு உலகம் முழுதும் யாசகம் பெறும் இந்த அரசு, இப்படியான நிறுவனங்களை எதிர்த்துக்கொண்டு பயணிக்கமுடியுமா?

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உட்பட சர்வதேச அமைப்புகளும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. இந்தச்சட்டவரைவை ஒத்திவைத்து, எமது யோசனைகளையும் உள்வாங்கி, ஜனநாயக முறையில் அதனை நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். நாட்டை வங்குரோத்து அடைய வைத்தவர்களுக்கு சட்டம்கொண்டுவர அதிகாரம் இல்லை, பதவி விலக வேண்டும், ஆட்சியை விட்டு செல்ல வேண்டும் - என்றார். (அ-எ-44)

## நாடாளுமன்றில்...

யளிக்கக்கூடாது என்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபாபீடத்துக்குள் இறங்கி கோஷம் எழுப்பினர். சபாநாயகர் மற்றும் சபை முதல்வருக்கு நாடாளுமன்றத்தின் பாதுகாவலர்கள் மற்றும் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாதுகாப்புக்காக குழுமியதால் அங்கு பதற்றமான நிலைமை காணப்பட்டது.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருந்த தருணத்தில் நாடாளுமன்றத்தில் ஆளும், எதிர்க்கட்சிகளுக்கு இடையே மோதல்கள் ஏற்பட்டன. அதன் பின்னர் சபாநாயகருக்கும், சபை முதல்வருக்கும் பாதுகாப்பு வழங்கும் சந்தர்ப்பம் நேற்று உருவானது. (அ-எ-இ)

## போதைப்...

யாழ்ப்பாணம் புறநகர்ப் பகுதியைச் சேர்ந்த 27 வயது இளைஞர் ஒருவரே கலட்டிப் பகுதியில் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டார். அவரின் உடலில் காயங்கள் காணப்பட்டதால் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டிருந்தது.

இளைஞரின் சடலம் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதிகளவு ஹெரோய்ன் போதைப்பொருள் பாவனையே இளைஞரின் உயிரிழப்புக்குக் காரணம்என்றுஉடற்கூற்றுப்பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. போதையில் சுயநினைவற்று நடந்துகொண்டதால் அவரது உடலில் காயங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
30 . 03 . 1945



மறைவு
22 . 01 . 2024

### நாகமுத்து சிற்றம்பலம்

(ஓய்வு நிலை திட்டமிடல் பணிப்பாளர்)

இடைக்காடு அச்சுவேலியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்த சிற்றம்பலம் அவர்கள் கடந்த (22.01.2024) அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு திருமதி நாகமுத்து மாணிக்கம அவர்களின அன்பு புதல்வனும், நாகமுத்து மாணிக்கம் அவர்களின் அன்பப் புதல்வனும், காலஞ்சென்ற திரு திருமடதி பொன்னையா பொன்னம்மா அவர்களின் அன்பு மருமகனும், தேவசிகாமணி அவர்களின் அன்புக் கணவனும், சதீஸ்குமார் சகிலா மற்றும் சூரியகுமார் அவர்களின் அன்பத் தகப்பனும், சஜிதரா மற்றும் பரதன் அவர்களின் அன்பு மாமனாரும், சஞ்சீவ்இ சகானா, சிறினிகா, பாவகி, மனோதீதன், அதிரூபன் அவர்களின் அன்புப் பேரனும், முருகேசு, கந்தசாமி, சின்னத்தங்கம் (காலஞ்சென்ற), வள்ளி நாயகி, நாகேஜ்வரி, இராமநாதன், மகேந்திரன், மகேஸ்வரன் மற்றும் கணேசபவன் அவர்களின் அன்புக்குரிய மூத்த சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.01.2024) வெள்ளிக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 01.00 மணியளவில் சாமித்திடல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பொன் இல்லம்,**
**இடைக்காடு - மேற்கு,**
**அச்சுவேலி.**

தகவல்:
**மனைவி மற்றும் பிள்ளைகள்**
**077 288 9626**

(CS 27769) S-1

## மரண அறிவித்தல்



### அமரர் திரு லயன் ஆறுமுகம் காசித்தம்பிஇராமநாதன்

(ஓய்வு பெற்ற இராணுவ உத்தியோகத்தர் RSM (WOI)

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் சிவன் வீதி ஆவரங்காலை வதிவிடமாகவும் கொண்ட திரு லயன் ஆறுமுகம் காசிதம்பி இராமநாதன் அவர்கள் 23.01.2024 அன்று இறைபதம் அடைந்துவிட்டார். இவர் தங்கேஸ்வரி மற்றும் காலம் சென்ற பாக்கியராணியின் அன்புக் கணவரும் நிரஞ்சன் (கனடா), நிர்மலா (லண்டன்), செல்வரஞ்சன் (லண்டன்), ஸ்ரீரஞ்சன் (லண்டன்), நிர்த்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ரதிகலா , தவபாலசிங்கம், சுகந்தினி, யமுனா, சுதாகரன், ஆகியோரின் மாமனாரும் சரண், லக்சிகா, நிகிதா, பிறீதா, நவீனா, நமீரா, டிசானி, டிஷான் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.01.2024 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக இராணுவ மரியாதையுடன் ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**சிவன் வீதி**
**ஆவரங்கால்.**

தகவல்: **குடும்பத்தினர்**
**077 856 8363**

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
17 . 07 . 1938



ஆண்டவன் அடியில்
24 . 01 . 2024

### சின்னையா சிவஞானம்

(ஓய்வு நிலை எழுதுவினைஞர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை)

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், மீசாலை மேற்கு, மீசாலை ஐயா கடையடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவஞானம் அவர்கள் நேற்று (24.01.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி அன்னப்பிள்ளை தம்பதிகளின அன்பு மருமகனும், புனிதவதியின் பாசமிகு கணவரும், சண்முகப்பிரியா (மருந்தக உதவியாளர், அம்பியா பாமசி, சாவகச்சேரி), பிரியறஜனியின் ஆசை அப்பாவும், காலஞ்சென்றவர்களான சம்பந்தபிள்ளை, கனகசபை மற்றும் உமையம்மையின் அன்பு மைத்துனரும், வசந்தகுமாரின் (வானிலை அதிகாரி) சித்தப்பாவும், விஜயநந்தினியின் (றோயல் கல்லூரி ஆசிரியை) துணைவழி மாமாவும், மதுசாயியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஐயா கடையடி,**
**மீசாலை மேற்கு, மீசாலை,**
**சாவகச்சேரி**
**077 838 8878**
**077 508 1630**

தகவல்:
**மனைவி,பிள்ளைகள்**

## மரண அறிவித்தல்



### திருமதி சிவநேயச்செல்வி நந்ததேவா

(களபூமி காரைநகர்)

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவநேயச்செல்வி நந்ததேவா அவர்கள் நேற்று (24.01.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, நாகம்மா அவர்களின் அன்பு மகளும், க.நந்ததேவா (Technical officer, Onally Holdings (Pvt) Ltd, Colmbo - 04), அவர்களின் அன்பு மனைவியும், பிரபாவதி, சிவரூபினி, கிருபாலினி, பிரகலா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்றவர்களான கதிரவேலு, பரமேஸ்வரி அவர்களின் பாசமிகு மருமகளும், கௌரி, பாலதேவா, ஏகாம்பரநாதன், பராசக்தி மற்றும் சிவசோதி, சிவராசா, ஆனந்தகுமார் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (25.01.2024) வியாழக்கிழமை காலை 09.30 மணியளவில் அவரது இல்லத்தில் (இல:13, 40th lane, Wellawatte, Colombo - 06) நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பொரளை கனத்தை இந்து மயானத்திற்கு நண்பகல் 12.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சகோதரிகள்**
**பிரபா: 077 395 0521**
**[illegible]: 071 428 1271**
**கிருபா: 074 069 2277**
**கலா: 076 772 8819**

தகவல்:
**க.நந்ததேவா (கணவர்)**
**077 495 5622**

(CS 27763) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டமாநாடு...

இந்தச் சட்டமாநாடு 'நெருக்கடிகளுக் கூடானவழிகள்' எனும்தொனிப்பொருளில் வடிவமைக்கப்பட்டுள்ளது. சட்டப்பரப்பில் அதிகம் பேசப்படாத விடயங்க ளைப் பேசுதல், பன்மைத்துவ ஆய்வை ஊக் குவித்தல், அவ்வகை ஆய்வு முயற்சி களைக் கலந்துரையாடுவதற்கான கள மொன்றை அமைத்தல் போன்ற நோக் கங்களுக்காக நடத்தப்படுகின்றது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பல்க லைக்கழக கலைப்பீடாதிபதி சி.ரகுராம் தெரிவித்துள்ளதாவது:-

இந்தியாவின் புகழ்பெற்ற சுரனா மற்றும் சுரனா சர்வதேச வழக்கறிஞர்கள் நிறுவ னத்துடன் இணைந்து இந்தச் சட்டமா நாடு நடத்தப்படுகின்றது.

சட்டப்புலமையாளர்கள், ஆய்வாளர்கள் ஆகியோரையும் அவர்களின் ஆய்வுச் சிந்தனைகளையும் ஒன்றிணைத்தல், எழுத்திலுள்ள சட்டத்துக்கும் அதன் செயற்பாட்டுக்குமான இடைவெளியைக் குறைத்தல், சட்ட மாணவர்களுக்கு சட் டத்துறை சார் ஆய்வுச் சிந்தனைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் துறைசார் நிபுணர்களுடனான வலையமைப்பை ஏற்படுத்தல் ஆகிய பல்வேறு நோக்கங் களைக் கொண்டதாக இந்த மாநாடு வடிவமைக்கப்பட்டுள்ளது.

முதல் நாள் நிகழ்வின் பிரதம விருந்தின ராக சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்ணமும், கௌரவ விருந்தினராக ஐக்கிய நாடுக ளின் முன்னாள் நேருதவிச் செயலாள ரும் சிறுவர் மற்றும் ஆயுத முரண்பாடு தொடர்பான செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியுமான கலாநிதி ராதிகா குமாரசுவாமியும் கலந்துகொள்ள வுள்ளனர்.

முதல் நாள் நிகழ் வின் சிறப்பு நிகழ் வாக ஜனாதிபதி சட் டத்தரணி கலாநிதி கனகேஸ்வரன் மற் றும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் வாழ் நாள் பேராசிரியர் சொர்ணராஜா ஆகி யோரது திறப்புரை கள் இடம்பெறவுள் ளன. 'இலங்கை யில் பகிரங்க சட்டத் தின் எதிர்காலம்: நெருக்கடிகளும் சவால்களும்' என் னும் தலைப்பி லான கலந்துரை யாடல் நிகழ்வொன் றும் இடம்பெறவுள் ளது.

இரண்டாம் நாள் நிகழ்வில் உயர்நீதி மன்ற நீதிபதி யசந்த கோதா கொட பிரதம விருந் தினராகவும் அரச மைப்புச் சட்ட நிபு ணர் ஜனாதிபதி சட் டத்தரணி கலாநிதி ஜயம்பதி விக்ரம ரட்ண கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ள வுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் அமெரிக் காவின் யாலே (Yale) பல்கலைக்க ழகத்தின் வரலாற் றுத் துறைத் துணைப் பேராசிரியர் ரோஹித் டேவும் சுரனா மற்றும் சுரனா சர்வதேச வழக்கறிஞர் நிறுவனத்தின் முகாமைத்துவப் பங்காளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கலாநிதி வினோத் சுரனாவும் திறப்புரைகள் ஆற் றவுள்ளனர்.

'இலங்கையின் பொருளாதார நெருக்க டியிலிருந்து மேலெழுவதற்கான சட்டத் தின் வகிபாகம்' என்னும் தலைப்பிலான கலந்துரையாடலும் இரண்டாம் நாள் நடைபெறும்.

மாநாட்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய் வுக் கட்டுரைச் சுருக்கங்கள் இரண்டு நாள் அமர்விலும் ஆய்வாளர்களால் வாசிக்கப்படவுள்ளது. இந்த மாநாட்டில் ஆர்வமுள்ளவர்கள் பங்கேற்கமுடியும் - என்றார். (அ-எ-125)

## நிகழ்நிலைச்...

ஆளுங்கட்சியான பொதுஜன பெரமுன வும், ஐக்கிய தேசியக் கட்சியும் இந்தச் சட்ட வரைவுக்கு ஆதரவாக வாக்களித் தன. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஏனைய எதிர்க்கட் சிகளான தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகிய கட் சிகள் எதிர்த்து வாக்களித்தன.

நிகழ்நிலை காப்பு உத்தேச திருத்தச் சட்ட வரைவு இரண்டாம் வாசிப்புக்காக நேற் றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் விவா தத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சட்ட வரைவு மீதான இறுதிநாள் விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற் றது.

இந்தச் சட்ட வரைவுக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டதுடன், இந் தச் சட்டவரைவு நிறைவேற்றுவதை ஒத் திவைக்கவேண்டும் என்று வலியுறுத் தின. ஆயினும் ஆளும்கட்சியின் இந்தச் சட்டவரைவுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இறுதியில் இந்தச் சட்டவரைவு 46 மேலதிக வாக்குக ளால் நிறைவேற்றப்பட் டது. நிகழ்நிலை காப்புச் சட்ட வரைவின் மூன்றா வது மதிப்பீடு வாக் கெடுப்பு இன்றி நிறைவேற்றப்பட் டது. நிகழ்நிலைக் காப்புச் சட்டத்துக்கு சபாநாயகர் அங்கீ காரம் வழங்கியதும் அது நடைமுறைக்கு வரும்.

இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்ததும் சமூக ஊடகங்கள் மற்றும் இணையத்த ளங்களில் பகிரப்படும் போலிச் செய்தி கள் என்று கருதப்படுவவை, சேறுபூசும் தகவல்கள் என்று கருதப்படுபவை தொடர்பாக புதிய சட்டத்தில் உருவாக்கப் பட்டுள்ள ஆணைக்குழு கண்காணிப்பு களை நடத்தும். குற்றம் உறுதி செய்யப் பட்டால் குற்றவாளிக்கு அதிகபட்ச தண்ட னையாக 5 வருடங்கள் சிறைத்தண் டனை வழங்கமுடியும். (அ-எ-44)


## சாரதி தேவை



உயர்பதவி நிலையில் உள்ள ஒருவருக்கு பிரத்தியேக சாரதி உடன் தேவை. (யாழ்- கொழும்பு பயணத்துக்கான சாரத்தியம் செய்யக்கூடியவர்களுக்கு முன்னுரிமை)

தொடர்புக்கு
0771209998



## Asion Furnitrue

AD License உடன்
வாகன ஓட்டுனர் தேவை
(யாழ் நகரில் வசிப்பவர் விரும்பத்தக்கது)

தொடர்பு: 076 821 9414


## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 11 . 1936



மறைவு 24 . 01 . 2024

### இராசம்மா கார்த்திகேயன் (இரகுநாதன்)

யாழ். வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், நாயன்மார்கட்டு, விஸ்வமடு மற்றும் கந்தர்மடம் ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்ட இராசம்மா கார்த்திகேயன் (இரகுநாதன்) அவர்கள் நேற்று (24.01.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான காசிப்பிள்ளை பொன்னாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கார்த்திகேயனின் (இரகுநாதன்) பாசமிகு மனைவியும், காலஞ் சென்றவர்களான கந்தையா, ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவரான தவனேஸ்வரி, தவநேசம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவனேஸ்வரி, கேதீஸ்வரநாதன், பரமேஸ்வரி, பரமேஸ்வரன், தமிழ்ச்செல்வி, மாங்களேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான மகாதேவன் மற்றும் சிவபரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், புஸ்பதேவன், நளாயினி, திருச்செல்வம், வரதலட்சுமி, யோகானந்தம், உதயணன் ஆகியோரின் அன்பு மாமியாரும், தாரணி - சத்தியநாராயணன், நிறோஜினி - அனுரதன், தாட்சாயினி - தவரூபன், கஜனி - அருள்தீபன், கஸ்தூரி - விஸ்னுவேந்தன், கபிலன், விதுஷன், ஜெயந்தன், கார்த்தியா, மீரா - புரவர, தீபா, தினேஸ், ரதினி, உசாந்தன் - Gutu, மதுரன் மற்றும் பவித்தியா ஆகியோரின் அன்புப் பேத்தியும், அக்ஷியன், அஸ்வினி, அஞ்யனி, சருஞ்யன், லோகேஞ்யினி, அபினாஷ், கிஷானா, ஆத்மிகன் மற்றும் வர்மிகா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.


அன்னாரின் வீட்டுக் கிரியைகள் இன்று (25.01.2024) வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு , 58, பழம் வீதி, கந்தர்மட இல்லத்தில் நடைபெற்று, இறுதிக் கிரியைகள் செம்மணி இந்துமயானத்தில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 791 7831, 021 222 9384

(CS 27765) S-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 09 . 1939



மறைவு 23 . 01 . 2024

### தர்மேந்திரம் ஆயிலியம்

நீர்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மேந்திரம் ஆயிலியம் 23.01.2024 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்ற குமாரசாமி தர்மேந்திரம் அவர்களின் அன்பு மனைவியும் காலம் சென்ற பாலேந்திரன் (கனடா), ஜெயராணி (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தாயாரும், உஷா (கனடா), காலம் சென்ற செந்தில் வேல் (ஜேர்மனி), அன்பு மாமியும் திவாகரன், ஐங்கரன் (கனடா), ஆரணி (ஜேர்மனி), ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26.01.2024 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் மருமகன் புவனேஸ்வரன் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27764) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு





**தோற்றம்**
**23.07.2003**

**மறைவு**
**05.02.2023**

கடந்த 05.02.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதமடைந்த
எமது அன்புத் தெய்வம்

# ஜோசேப் அனோஜன்

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (25.01.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


**மலர்ந்த பூவொன்று**
**வாசனையை பரவச் செய்து**
**வசந்தத்தை பறித்துச் சென்றது.....**

**நினைவுகள் நித்தம் வந்து**
**நிம்மதியை தொலைக்கின்றது...**
**வருமா மீண்டும் வசந்தம் என்ற**
**தொடரான கேள்விகளோடு தொடர்கின்றது**
**எம் கண்ணீர் பயணம்.....**

**ஏக்கம் மட்டும் மிஞ்ச**
**நீர்த்துளிகள் நிறைகின்றன....**
**காலங்கள் கரைந்தாலும் ஆயிரம்**
**உறவுகள் எம் அருகில் இருந்தாலும்**
**எம் கண்களில் ஒளிரும்**
**உன் அன்பின் வெளிச்சம்....**

**உன்னைப் பிரிந்த நாள் முதல்**
**இன்று வரை உன் அன்பிற்கு**
**இணையாருமில்லை உன்**
**பாசத்திற்கு ஏங்கும் எங்கள்**
**ஏங்கங்கள் உணர முடியாத வலியாய்**
**எங்களை கொல்கின்றது**

**நீ வருவாய் என்ற நம்பிக்கையில்**
**உன் பிரிவால் வாடும் குடும்பத்தினர்!**



**உன் பிரிவால் துயருறும்**
**உன் அண்ணா சனுராஜன்**

**இல.582/56,**
**செபஸ்ரியான் லேன்,**
**ஒட்டுமடம் யாழ்ப்பாணம்.**

(cs53669) (N-1)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் [illegible] உள்ள அவர்களது பணிமனையில் 25.01. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org